# ஜீவனும் மரணமும்



பாடம் 3
ஜனவரி 17,2026




“கிறிஸ்து
எனக்கு
ஜீவன்,
சாவு
எனக்கு
ஆதாயம்.”

பிலிப்பியர் 1:21

இரக்கமில்லாத நீரோவால் நியாயந்தீர்க்கப்படும்படி பவுல் காத்திருக்கிறார். அவருடைய எதிர்காலம் நீதியை சார்ந்து அல்ல, சீசரின் எண்ணவொட்டங்களை பொறுத்தே இருந்தது.

ஆனால் அவருக்கு தெரியும் உண்மையிலேயே தன்னுடைய முடிவு நீரோவின் கைகளில் அல்ல, தேவனுடைய கரத்திலிருக்கிறது என்று. ஆகவே, சபைகளில் தனக்காக ஏறேடுக்கப்டும் ஜெபங்களினால் தான் விடுதலையாவேன் என்று அவர் உறுதியாக இருந்தார்.

என்றாலும், சுவிஷேசத்திற்காக அவர் மரிக்க நேர்ந்தாலும் (அதற்காக தான் அவருடைய சிறையிருப்பு), கிறிஸ்துவுக்காக தன் ஜீவனை கொடுப்பதற்கும் அவர் விருப்பமாக இருந்தார்.





## கிறிஸ்துவுக்காக வாழ்வதா அல்லது மரிப்பதா?

- பவுலுக்குள் கிறிஸ்து உயர்த்தப்பட்டார் (பிலிப் 1:10-20, 25-26)
- கிறிஸ்வுக்காக வாழ்வது அல்லது மரிப்பது (பிலிப் 1:21-22)
- பவுலின் இருவேறுபாடு (பிலிப் 1:23-24)

## கிறிஸ்துவுக்காக வாழ்வது என்றால் என்ன அர்த்தம்?

- சுவிசேஷத்திற்கு பாத்திரராக நடந்துகொள்ளுதல் (பிலிப் 1:27பி)
- சுவிசேஷத்திற்காக இணைந்து போராடுதல் (பிலிப் 1:27மு-30)

# கிறிஸ்துவுக்காக வாழ்வதா மரிப்பதா?



# பவுலுக்குள் கிறிஸ்து உயர்த்தப்படுகிறார்

"நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப்போகாமல், எப்பொழுதும்போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும்." (பிலிப்பியர் 1:20)



அவர் அடைந்த பல பாடுகளினிமித்தம் பவுல் சந்தோஷப்பட்டார்(கொலோ. 1:24மு; 2 கொரி. 11:23-27). ஆம், பாடுபடும்போது மாத்திரம் அவர் சந்தோஷப்படவில்லை, தான் அடைந்த அந்த இக்கட்டுகளின் காரணங்களுக்காகவும் அவர் சந்தோஷப்பட்டார், ஏனென்றால் அவைகளின் ஒன்றினால் கிறிஸ்துவின் சபைக்கு பலன் கிடைத்தது (கொலோ. 1:24பி;2 கொரி. 11:28).



அவருடைய பாடுகளிலும் மரணத்திலும்—பவுல் கிறிஸ்துவையே பிரதிபலித்தார்—ஆகவே கிறிஸ்து பவுலுக்குள் உயர்த்தப்பட்டார்(பிலிப். 1:20).



பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில், பவுல் அதை தெளிவுப்படுத்துகிறார், அந்த தருணத்தில், தன்னுடைய மரணத்தினால் கிறிஸ்துவை உயர்த்த அவர் எதிர்பார்க்கவில்லை, ஆனால், சபையின் ஜெபங்களினாலும் பரிசுத்த ஆவியானவரின் கிரியையினாலும், விடுதலையாக்கப்பட்டு தன் ஜீவனைக் கொண்டு கிறிஸ்துவுக்காக தான் ஊழியம் செய்யப்போவதாக அவர் நம்பினார்(பிலிப். 1:19, 25-26). நம் உலகில் நிலவும் தீமையின் காரணமாக, கிறிஸ்து வாழ்ந்தது போல் நாம் வாழ்வது என்பது பெரும்பாலும் கிறிஸ்து அனுபவித்தது போல் துன்பப்படுவதையும், சில சமயங்களில், கிறிஸ்து மரித்தது போல் மரிப்பதையும் உள்ளடக்கியது (2 தீமோ. 3:12).

# கிறிஸ்துவுக்காக வாழ்வது அல்லது மரிப்பது

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்.." (பிலிப்பியர் 1:21)



எல்லா துன்பங்களுக்குமான மூல காரணம், நன்மைக்கும் தீமைக்கும் இடையில், கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையில் இன்று நடததப்படும் பிரபஞ்ச போரில் உள்ளது.



இது ஒரு ஆன்மீகப் போர், இது ஆன்மீக ஆயுதங்களை கொண்டு போராடபட வேண்டும். எதிரியின் சீடர்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிராக சட்டவிரோதமான ஆயுதங்களை பயன்படுத்துகிறார்கள் (பொய்கள், விமர்சனம், சகாக்களின் அழுத்தம், போன்றவை.).



ஆனால் நாம் உண்மை, நீதி போன்ற ஆயுதங்களை பயன்படுத்துகிறோம் (2 கொரி. 6:4-7). "அரண்களை இடித்து தள்ளக்கூடிய" வலிமைமிக்க ஆயுதங்கள் (2 கொரி. 10:3-5).



ஆனால் போரில் நீதிமான்கள் மரித்துவிட்டால் என்ன நடக்கும்? பவுலின் கூற்றுப்படி, இது நமக்கு ஒரு ஆதாயத்தில் முடிகிறது (பிலிப். 1:21).

கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிற நமக்கு, மரணம் நம்மை எதிரியின் கைக்கு எட்டாதபடிக்கு கொண்டு சென்று, எல்லா துன்பங்களிலிருந்தும் நம்மை விடுவிக்கிறது (நீதி. 14:32; ஏசா. 57:1).

# பவுலின் இருவேறுபாடு

"ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனுண்டாயிருப்பதால், நான் தெரிந்துகொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன். ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்;." (பிலிப்பியர் 1:23-24)

அவரால் முடிவெடுக்கமுடியாவிட்டாலும், பவுல் இரண்டு சாத்தியக்கூறுகளுக்கு இடையில் சிக்கிகொள்கிறார் (பிலிப். 1:23-24):

| தேகத்தை விட்டு பிரிதல் | சரீரத்தில் பிழைத்திருத்தல் |
| --- | --- |
| கிறிஸ்துவுடனே இருத்தல் | சபைக்கு பிரயோனமாயிருக்கும் |

இந்த வசனத்தை தனித்தனியாக எடுத்துக்கொண்டால், நாம் இறந்தவுடன் இயேசுவோடு இருக்க பரலோகத்திற்கு ஏறுகிறோம் என்று பவுல் நமக்கு கற்பிக்கிறார். இது வேத பகுதிகளுக்கு முரணானது என்று நாம் ஊகிக்கலாம்(பிர. 9:5; சங். 6:5).



பிலிப்பியருக்கு எழுதிய அதே கடிதத்தில், கிறிஸ்துவோடு முழுமையாக இருக்க, உயிர்தெழுதலின் தருணத்திற்காக காத்திருக்க வேண்டும் என்று அவர் கூறுகிறார் (பிலிப். 3:8-11).

மற்றொரு சந்தர்ப்பத்தில், பவுல் உடல் அழியாமையை அணிவதற்காக அழிக்கப்பட்ட(மரிக்கும்) ஒரு கூடாரத்துடன் ஒப்பிடுகிறார்(2 கொரி 5:1-4). இருப்பினும் இந்த ஆடை இரண்டாம் வருகையின் போது நிகழ்கிறது, மரணத்தின் போது அல்ல என்பதை அவர் தெளிவுப்படுத்துகிறார் (1 கொரி. 15:42, 51-54).

# கிறிஸ்துவுக்காக வாழ்வது என்றால் என்ன அர்த்தம்?

# சுவிசேஷத்திற்கு பாத்திரராக நடந்துகொள்ளுதல்

"… எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்." (பிலிப்பியர் 1:27பி)

"உங்கள் நடத்தை" என்ற சொற்றொடர் கிரேக்க வார்த்தையான பொலியோடுமை என்பதன் மொழிபெயர்ப்பாகும், இதன் பொருள் "குடிமக்களாக வாழ்வது". பிலிப்பியர்களும் (நாம் அனைவரும்) பரலோக குடிமக்களுக்கு பாத்திரமான முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று பவுல் வலிறுத்துகிறார் (பிலிப் . 3:20).

மலை பிரசங்கத்தில், பரலோக குடிமக்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை இயேசு நமக்கு கற்று கொடுத்தார்.

இதை பின்வருமாறு சுருக்கமாக கூறலாம்: "நியாயஞ் செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பது…" (மீகா 6:8).

பவுல் இந்த ஆலோசனையில் தன்னைப் பற்றிய ஒரு தலைப்புக்கு அறிமுகமாகப் பயன்படுத்துகிறார்: திருச்சபையில் ஒற்றுமை.

பெருமையினாலும் ஒருவருக்கொருவர் தகாத முறையில் நடந்து கொள்வதாலும் ஒற்றுமையின்மை பெரும்பாலும் உருவாகிறது என்பதை அவர் அறிந்திருந்தார். எனவே, நாம் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் நம்மை ஊக்குவிக்கிறார்.



# சுவிசேஷத்திற்காக இணைந்து போராடுதல்

"நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக்குறித்து நான் கேள்விப்படும்படி,…" (பிலிப்பியர் 1:27மு)





நீதிமானாகவும் நேர்மையாகவும் இருப்பது துன்பமில்லாத வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்காது (பிலிப். 1:30). மாறாக, "உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போலப் பூமியில் ஒருவனும் இல்லை" (யோபு 1:8), என்று தேவனால் அறிவிக்கப்பட்ட யோபுவே, ஒரு பயங்கரமான துன்பத்தை சந்தித்தார், அது சாத்தானின் வேலை.



நாம் ஈடுப்பட்டுள்ள போரில், ஒற்றுமை ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. நற்செய்தியை பாதுகாக்க ஒன்றாக போராட வேண்டுமென்று பவுல் நம்மை ஊக்குவிக்கிறார்(பிலிப். 1:27மு).



இந்த நோக்கத்தின் ஒற்றுமை ஜெபத்துடனும் வேதத்தை படிப்பதுடனும் இணைக்கப்பட வேண்டும்(எபே. 6:18; பிலிப். 2:16).



தீமையுடன் நாம் மோதலுக்கு வரும்போது, நம்மை எதிர்ப்பவர்களைக் கண்டு நாம் பயப்படக்கூடாது (பிலிப். 1:28). சாத்தான் தோற்கடிக்கப்பட்ட எதிரி என்பதை நினைவில் கொள்வோம், ஏனென்றால் ஏற்கனவே இந்த போரில் கிறிஸ்து சிலுவையில் வெற்றி பெற்றுள்ளார் (லூக்கா 10:18; கொலோ. 2:15).